*2013 ஏப்ரல் 3]*

## 2.12 தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம்

திருநங்கைகள் குடும்பத்தினரால் வெறுத்து ஒதுக்கப்பட்டு சமூக வேறுபாட்டின் காரணமாக சமூகத்திலிருந்தும் தள்ளி வைக்கப்படுவதன் காரணமாக, அவர்கள் பல்வேறு வகைகளில் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுகிறது. திருநங்கைகள் தங்கள் குடும்பத்தினராலும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படாத காரணத்தினால், படிப்பை பாதியிலே விட்டு விட்டு, வீட்டை விட்டு வெளியேறி, நாடோடிகளாக வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. திருநங்கைகள் தங்கள் குடும்பத்தை விட்டு, வெளியேறும்போது படிப்புச் சான்று, கல்விச் சான்று, சாதிச் சான்று, குடும்ப அட்டை, தேர்தல் அடையாள அட்டை போன்ற முக்கிய ஆவணங்களை எடுத்துச் செல்ல இயலுவது இல்லை. இது போன்று, திருநங்கைகளால் எதிர்கொள்ளப்படும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசின் மூலம் திருநங்கைகள் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. திருநங்கைகள் தங்களது வாழ்வாதாரத்தை பெருக்கி கொள்ளவும், பொருளாதார ரீதியாகத் தங்களை உயர்த்திக் கொள்ளவும், 25 சதவிகித அரசு மானியத்துடன் திருநங்கைகள் சுய உதவிக் குழுக்களுக்கு 15 இலட்சம் வரை வங்கி கடன் வழங்கப்படுகிறது. திருநங்கைகளின் 51 சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவிகித மானியமாக ரூ.55.00 இலட்சமும், ரூ.1.65 கோடி வங்கிக் கடனும் வழங்கப்பட்டுள்ளது. அது தவிர பல்வேறு சிறுதொழில் கடன்கள் வழங்குவதன் மூலம் மளிகைக் கடை, பசுமாடுகள் வளர்த்தல், சோப்பு உற்பத்தி செய்தல், பால் சம்பந்தமான பொருட்களை உற்பத்தி செய்தல் போன்ற பல்வேறு தொழில்களை செய்து வருகின்றனர். 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கு உதவிடும் வகையில், அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக மாதம் ரூ.1,000/- வழங்கிடும் திட்டம் 5.9.2012 முதல் செயல்பட்டு வருகிறது.

2013-14 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்திற்காக ரூ.228.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.13 பெண்கள் நலம் பேணும் முக்கியச் சட்டங்கள்

சமுதாய குற்றங்களால் எளிதில் பாதிக்கப்படும் நிலையிலுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கும்